**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

O.S.No.65/2020 **P.W.2**

Deposition of witness for solemnly affirmed byTmt.S.Sangeetha, Assistant of this court on 27.01.2026 in accordance with the provision of the Act 1873.

| | | |
|---|---|---|
| Name | : | மாதேஷ்வரன் |
| Father Name: | : | சின்னதம்பி |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் 1ம் வாதி பொன்னுசாமிகவுண்டர் இவ்வழக்கை தாக்கல் செய்து 6 வருடங்கள் இருக்கும் என்றால் 2013ல் தாக்கல் செய்தார். மேற்படி பொன்னுசாமி கவுண்டர் இறந்து 6 வருடங்கள் இருக்கும். வாதி இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது 1ம் பிரதிவாதி செல்வம் அவரது நிலத்தில் அஸ்திவாரம் பறித்துக் கொண்டிருந்தார் என்றால் சரிதான். மேற்படி அஸ்திவாரம் பறிக்கும் சமயத்தில் 1ம் வாதி தனது நிலத்தை சேர்த்து பறிக்கக்கூடாது என்று வழக்குதாக்கல் செய்தார். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை அளவீடு செய்யும்போது நான் உடனிருந்தேனா என்றால் உடனிருந்தேன். 1ம் பிரதிவாதி அஸ்திவாரம் பறித்து வீடுகட்டி குடி வந்துள்ளார் என்றால் ஆமாம். மேற்படி 1ம் பிரதிவாதி நிலத்திற்கு எந்த திசையில் வாதியின் நிலம் உள்ளது என்றால் வடபுறத்தில் உள்ளது. தற்போது 1ம் பிரதிவாதியின் நிலத்திற்கு வடபுறத்தில் உள்ள 1ம் வாதியின் வீடும், காலிநிலமும் ராஜன் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது 1ம் பிரதிவாதி வீடுகட்டியதற்கு பின்பு வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை – இல்லை.**

Sd/E.Ridhula<br>DM,SDM.

Sd/Madheswaran(PW2)